10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 92 புதன்கிழமை ஒகஸ்ட் 15 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## சர்வதேசத்திடம் சம்பந்தர் முறைப்பாடு

கேப்பாபுலவு காணி விடுவிப்பு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சுவாமிநாதன், பாதுகாப்புச்செயலாளர், இராணுவத்தளபதி ஆகியோருக்கு அனுப்பி வைத்த கோரிக்கை கடிதங்கள் அவற்றுக்கு அவர்களிடமிருந்து கிடைத்த பதில்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தொடர்ந்து மெத்தனப் போக்கு நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ள எதிர்க் கட்சித்தலைவரும் தமிழ் தேசியக் 06




## உயிர்பறித்த ரயில் மறிப்பு!

வவுனியா தாண்டிக்குளத்தில் நேற்றுமாலை ஓட்டோச் சாரதி ஒருவரின் உயிரைப் பறித்த கடுகதி ரயில் இன்றுகாலை பொதுமக்களால் மறிக்கப்பட்டது.

பாதுகாப்புக் கடவையற்ற பகுதியால் பயணித்த ஓட்டோ ஒன்று, கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலுடன் நேற்றுமாலை மோதுண்டதில் இளைஞர் ஒருவர் பலியாகி இருந்தார்.

குறித்த பகுதியில் சில காலங்களுக்கு முன்னர் தற்காலிகப் பாதுகாப்புக் கடவை ஒன்று இருந்ததாகவும், ஆனால் அது இப்போது அகற்றப்பட்டதாலேயே நேற்றைய விபத்து நேர்ந்ததாகவும் அந் தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்,

இந்தநிலையில் குறித்த ரயில் இன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, இளைஞனின் உயிர் காவு கொள்ளப் பட்ட இடத்தில் காலை 8.20 மணியளவில் பொதுமக்கள் சிவப்புக் கொடி காட்டி தடுத்து நிறுத்தி, மறியல் போரில் குதித்தனர். நிரந்தரப் பாதுகாப்புக் கடவை நிறுவ வேண்டும் எனவும், உயிரிழந்த இளைஞரின் சாவுக்கு நீதி வேண்டும் எனவும் 06

## ஆறுதிருமுருகனுக்கு "யாழ்விருது"



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுகனிற்கு "யாழ்" விருது வழங்கப்பட்டுள்ளது.

இன்று காலை நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்ற நல்லைக் குமரன் வெள்ளி விழா மலர் வெளியீட்டு விழா நிகழ்வின்போது இந்த விருது வழங் கப்பட்டது. (உ-16)

## புலிகளின் தளபதியின் கைத்துப்பாக்கி மீட்பு

### ராகமவில் சார்ஜண்ட் கைது

விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தளபதி ஒருவர் பயன்படுத்திய எம்.எம். 9 ரக கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை விற்க முயன்ற சார்ஜண்ட் ராகம பகுதியில் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வசமிருந்த கைத்துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளது.

இறுதிப் போரில் பங்குபற்றிய குறித்த இராணுவ சார்ஜண்ட், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரத்தில் நடந்த சமரில் சாவடைந்த விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதி ஒருவரின் சடலத்தில் இருந்த கைத்துப்பாக்கியையும், தோட்டாக்களையும் தன் வசம் எடுத்துக் கொண்டார். இது குறித்து தன் மேலதிகாரிகளுக்கு அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த 06

## மின்னல் தாக்கி மீனவர் சாவு

குருநகர்க் கடலில் இன்று அதிகாலை பரிதாபம்

குருநகர் கடலில் மின்னல் தாக்கி மீனவர் ஒரு வர் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகர் - கடற்கரை வீதியைச் சேர்ந்த பற்றிக் நிரஞ்சன் என்ற 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு பரிதாப மாக உயிரிழந்தார்.

ஒரு படகில் நான்கு மீனவர்கள் கடலுக்குச் சென்றி ருந்தனர். இந்த நிலை யில் திடீரென மின் னல் படகைத் தாக் கியது. அதில் தாக் குண்ட ஒரு மீனவரே சம்பவ இடத்தில் மரணமானார். ஏனைய மூவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட் டுள்ளது. (அ)

## வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றார் மாரப்பன



புதிய வெளிநாட்டலுவல்கள் அமைச் சராக திலக் மாரப்பன, ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன முன்னிலையில் இன்று காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க, தனது பதவியை இராஜினாமாச் செய்ததை 06

## வெள்ளத்தின் மத்தியிலும் மடுமாதா திருவிழா



கடும் மழை வெள் ளத்தின் மத்தியிலும் மடு மாதாவின் வரு டாந்த ஆவணித் திருவிழா லட்சக் கணக்கான பக்தர் களின் பங்குபற்ற லோடுஇன்று சிறப் பாக நிறைவு பெற்றது. 06

ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

ஆரம்பம் 23.08.2017 புதன்கிழமை

❖ ஆஸ்திரேலியா சென்று தொழில்புரிய ஆசையா?
❖ சட்டபூர்வமாகச் செல்லும் வழி தெரியவில்லையா?
❖ கவலையை விடுங்கள்
❖ உங்களுக்கு வழிகாட்டுகிறது இந்தக் கருத்தரங்கு
❖ 30 பேருக்கு மட்டுமே சந்தர்ப்பம்

நேரம்: 7.00 p.m.- 8.30 p.m

Website : www.sanjicaldera.com

அனுமதி இலவசம்

MIA MEMBER OF MIGRATION INSTITUTE OF AUSTRALIA

Migration Agents Reg No. 0635492

ஜெட்வின் ஹோட்டல், மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் keith@sanjicaldera.com

முற்பதிவுகளுக்கு முந்துங்கள் பதிவு - 6.15 p.m - 6.45 p.m

தொடர்புகளுக்கு: 076 601 3381, 077 889 7853

# கிழக்கில் எமது ஆட்சிதான்



"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்பதில் யாரும், எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. கடந்த முறை நாங்கள் தனித்துக் கேட்டோம். தைரியமாகத் தனித்துக் கேட்க எடுத்த முடிவு தான் வெற்றியைத் தந்தது" என்று நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதுடன் மட்டுமன்றி, ஓட்டமாவடி கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையையும் உள்ளூராட்சித் தேர்தலில் கைப்பற்றும்" என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடாத் தொகுதி அமைப்பாளரும் கணக்காளருமான எச்.எம்.எம்.றியால் தலைமையில் ஓட்டமாவடி எம்.பி.சி.எஸ். நடைபெற்ற அபிவிருத்தியை நோக்கிய மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (உ)

# வடக்கில் மழை நீடிக்கும்

வடக்கு மாகாணத்தில் அடை மழை பெய்து வருகின்றது. இந்தக் காலநிலை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, தெற்கு , சப்ரகமுவ மாகாணங்களின் சில இடங்களிலும் மற்றும் புத்தளம் மாவட்டத்திலும் ஓரளவு மழை பெய்யக்கூடும். கிழக்கு, வடமத்தி மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் வேளையில் பெய்த இடியுடன் கூடிய மழை தற்காலிகமாக இன்றிலிருந்து குறைவடையும்.

வடக்கு மற்றும் கிழக்கு கடற்கரையோரங்களின் பல பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

யாழ். மாவட்டத்தில் மணிக்கு சுமார் 50 மில்லிமீற்றர் கன மழை பெய்யக்கூடும் என்று திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# நாடாளுமன்றில் சுயாதீன வரவு–செலவு காரியாலயம்

நாடாளுமன்றத்துக்குள் சுயாதீன வரவு-செலவு காரியாலயம் ஒன்றை ஸ்தாபிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இதனூடாக எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் யோசனைகளை முன்வைக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த வேலைத் திட்டத்துக்காக ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பல உதவி மற்றும் ஆலோசனை வழங்கியிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறியுள்ளதுடன், தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகச் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் குறித்தும் பதிலளித்துள்ளார். (உ)

# பதவி விலகினார் ஐ.சி.ஏ.ரி. பணிப்பாளர்



இலங்கைத் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஐ.சி.ஏ.ரி) முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியான முகுந்தன் கனகே, தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டதற்கிணங்கவே தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

தன்னுடைய இராஜினாமாக் கடிதத்தை, இலங்கைத் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ சபையிடம் கையளித்துள்ளார். இலங்கையின் டிஜிட்டல் கட்டமைப்பு துறையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதுவித ஊழல், மோசடியில் அல்லது அதற்கு துணை நிற்கும் விடயங்களில் தான் ஈடுபடவில்லை என்று அவர் தனது இராஜினாமா கடிதத்தில் கூறியுள்ளார். (உ)

# யாழில் இந்திய சுதந்திர தின விழா



யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் இந்தியாவின் 71 ஆவது சுதந்திர தின விழா இன்று கொண்டாடப்பட்டது.

# 1600 சிகரெட் பெட்டிகளுடன் ஒருவர் கைது



டுபாயிலிருந்து பெறுமதிவாய்ந்த புகைத்தல் பொருட்களை சட்டவிரோதமாக எடுத்து வந்த இளைஞர் ஒருவர் நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

26 வயதான குறித்த இளைஞர் ஷிஷா எனப்படும் சுவையூட்டப்பட்ட சிகரெட் வகைகளை கடத்தி வந்த நிலையில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான 1600 சிகரெட் பெட்கள் அவரிடமிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக அதன் பணிப்பாளரும் ஊடகப்பேச்சாளருமான சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார். (உ)

# கைபேசி பரிசோதனை: சட்டத்தரணிக்கு அனுமதி

மத்திய வங்கி முறி ஆணைக்குழு வசமுள்ள அர்ஜூன் மகேந்திரனின் கைபேசி தரவுகள், குற்றவிசாரணை திணைக்களத்தின் அதிகாரிகளால் பரிசோதிக்கப்படும் தருணத்தில் அவரின் சட்டத்தரணி ஒருவர் அங்கு பிரசன்னமாகியிருக்கலாம் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அர்ஜூன் மகேந்திரனின் சட்டத்தரணி அண்மையில் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே ஆணைக்குழுவின் இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, பர்பச்சுவல் பங்கு தரகு நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பல்சேனவின் கைபேசி தொடர்பான விசாரணையின் போதும் சட்டத்தரணி பிரசன்னமாவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்திய கைத்தொலைபேசி தரவுகளைப் பரிசோதிப்பதற்காக, ஆணைக்குழுவிடம் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# வீடு உடைத்து நகைகள் திருட்டு சந்தேகநபர் ஒருவர் கைது

வீடுகளை உடைத்து சொத்துக்களை திருடிய சம்பவம் தொடர்பில் வாத்துவ பிரதேசத்தில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 10ஆம் திகதி பத்தரமுல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றை உடைத்து சுமார் 08 இலட்சத்து 35 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அதன்படி விசாரணைகளை ஆரம்பித்த மிரிஹான விஷேட குற்றப்பிரிவு அதிகாரிகளினால் வாத்துவை பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் திருடப்பட்ட தங்க ஆபரணங்கள் சில பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் 28 வயதுடைய புளத்கொஹுபிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர். மேலதிக விசாரணைகளை மிரிஹான விஷேட குற்றப்பிரிவு ஆரம்பித்துள்ளது. (உ)

# சூதாடிய 8 பேர் கைது

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரங்கல் பகுதியில் சூதாடிய குற்றச்சாட்டில், குடும்பஸ்தர்கள் 8 பேர், நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா, திருகோணமலை, பூவரசந்தீவு, குட்டிக்கராச்சி பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள், இரவு வேளைகளில் சூது விளையாடி வருவதாகப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது, கைதுசெய்யப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனரென திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள், சூதாடுவதற்குப் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் ஒரு தொகைப் பணமும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. (உ)

மாதாந்தம்
ஒரு இலட்சம் வரை
சம்பாதிக்கலாம்
விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்
தொடர்புகளுக்கு : 021 300 4848

# இந்திய சுதந்திரதினம் டில்லியில் கோலாகலம்



இந்தியாவின் 71ஆவது சுதந்திரதினம் இன்று செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.
இந்த விழாவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்வில் பிரதமர் மோடிக்கு முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.
செங்கோட்டையில் கொடியேற்றிய பின் இந்தியப் பிரதமர் உரையாற்றுகையில்,
"இந்த ஆண்டு நாட்டுக்கு சிறப்பான ஆண்டாகும். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 75 ஆவது ஆண்டு, சம்பரான் சத்யாகிரகத்தின் 100 ஆவது ஆண்டு, கணேஷ் உத்சவின் 125 ஆவது ஆண்டு ஆகியவை இந்த ஆண்டின் சிறப்பம்சமகள்.
தீவிரவாதத்துக்கு கருணை காட்ட முடியாது. அவர்கள் மைய நீரோட்டத்தில் இணைந்து அவர்களின் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். பயங்கரவாதம், பயங்கரவாதிகளை அடக்குவதில் மென்மையான போக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை.
உலக அரங்கில் இந்தியாவின் தகுதி உயர்ந்து கொண்டேயிருக்கிறது. பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிராக உலக நாடுகள் நம் பக்கம் உள்ளன. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு துப்பாக்கி தோட்டாக்கள் அல்ல. காஷ்மீர் மக்களை அரவணைத்துச் செல்வதே அதற்குத் தீர்வு. ஜம்மு காஷ்மீரின் 'சொர்க்கபூமி' எனும் தகுதியை நாம் அனைவரும் சேர்ந்து மீட்டெடுப்போம்.இளைஞர்களின் கனவுகளைப் பூர்த்தி செய்யும் புதிய இந்தியாவைக் கட்டமைப்போம். ஊழலுக்கு எதிராக சமரசமில்லாத இந்தியாவை உருவாக்குவோம்" என்று தெரிவித்தார். (இ)

# சிறுமியைக் கொன்றவருக்கு பகிரங்க மரணதண்டனை


© EPA

யேமன் நாட்டில் நான்கு வயதுச் சிறுமி ஒருவரை வன்புணர்வின் பின் கொலை செய்த குற்றவாளிக்கு பலர் முன்னிலையில் பகிரங்க மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஹூசைன் அல் ஷஹீட் (வயது-22 ) என்னும் இளைஞர் நான்கு வயதுச் சிறுமி ஒருவரைக் கொடூரமான முறையில் வன்புணர்வுக் குட்படுத்திக் கொலை செய்துள்ளார். குற்றம் நிரூபிக்கப்பட்டதால், ஹூசைன் அல் ஷஹீட்டுக்கு பலர் முன் னிலையில் மரணதண்டனை வழங்கும் படி உத்தரவிடப்பட்டது.
இதையடுத்து அவருக்கு யேமனில் உள்ள சதுக்கமொன்றில் இரு கைகளையும் கட்டி, துப்பாக்கியால் 5 முறை சுட்டு மரணதண்டனை நேற்று நிறைவேற்றப்பட்டது.பின்பு கொல்லப்பட்ட ஹூசைன் அல் ஷஹீட்டின் சடலம் கிரேன் ஒன்றில் கட்டி காட்சிப் படுத்தப்பட்டது. (இ)

## பொறுத்திருந்து பார்ப்போம்

# வடகொரியா முடிவு





அமெரிக்காவின்செயற்பாடுகளைப்பொறுத்தே போரைத் தொடங்குவதா, இல்லையா என்ற முடிவை எடுக்கவுள்ளதாக வட கொரியத் தலைவர் கிம் ஜாங் கூறியுள்ளார்.
வட கொரியா தொடர்ந்து அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தி உலக நாடுகளைப் பீதியில் ஆழ்த்தி வருகிறது.
இதற்குப் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில் வட கொரியாவின் செயலுக்கு நாங்கள் பதிலடி கொடுப்போம் என அமெரிக்கா கூறியுள்ளது.
இதையடுத்து அமெரிக்காவின் குவாம் தீவை விரைவில் தாக்குவோம் என வட கொரியா எச்சரித்தது.
மேலும், இது தொடர்பான திட்ட அறிக்கையை அந்த நாட்டு இராணுவம் அதன் தலைவர் கிம் ஜாங்கிடம் கொடுத்துள்ளது.
இந்த அறிக்கையை பெற்ற பின்னர் கிம் ஜாங், "குவாம் தீவு தாக்குதல் தொடர்பான நடவடிக்கையை முடிவெடுக்கும் முன் அமெரிக்காவின் செயற்பாடுகளைக் கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கப் போகின்றோம். அணு ஆயுதங்களை நமக்கு அருகில் கொண்டு வந்த அமெரிக்கா முதலில் சரியான முடிவெடுத்து கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை தணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியதாக வட கொரிய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. (இ)

## ஐ.நா வீரர்கள் மாலியில் பலி

ஆபிரிக்க நாடான மாலியின் டிம்பக்டு நகரில் அமைந்துள்ள ஐ.நா அமைதிப்படையின் தலைமையகத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இந்தத்தாக்குதலில் ஏழு பேர் இறந்துள்ளனர். ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.
அதேவேளை அருகிலுள்ள வேறு இரு ஐ.நா. முகாம்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
இதில் மாலி நாட்டு இராணுவ வீரர் ஒருவரும், ஐ.நா. அமைதிப்படை வீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர். மற்றொரு அமைதிப்படை வீரர் காயமுற்றார்.
தீவிரவாதிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களை அடுத்து ஹெலிஹொப்டர்களில் விரைந்து வந்த மாலிப்படையினர் பதிலடி கொடுத்ததில் ,ஆறு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (இ)

# ஒருமாதம் ஏழையான கோடீஸ்வரப் புதல்வன்



தமிழ் சினிமாக்களில் வருவது போன்று, கோடீஸ்வரத் தொழிலதிபரின் புதல்வர்கள், ஒரு மாதம் ஏழையாக வாழ்ந்து பார்த்த சம்பவம் பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.
இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள ஹரே கிருஷ்ணா எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் கணேஷ்யாம் தோலாக்கியா.
இவரின் நிறுவனத்தின் மதிப்பு 6000 கோடி ரூபா.
இவரின் மூத்த மகன் திராவ்யா தோலக்கியா கடந்த ஆண்டு தந்தையின் உத்தரவை ஏற்று ஒரு மாதம் பல்வேறு கடைகளில் வேலை செய்து, சொற்ப வாடகை கொண்ட அறையில் ஏழை மக்களுடன் தங்கி, பல்வேறு அனுபவங்களைப் பெற்றார்.
அதேபோல கணேஷ்ராமின் இளைய மகன் ஹிதார் தோலாக்கியாவும் ஒரு மாதம் ஏழையாக வாழ்ந்து பார்த்துள்ளார்.
ஹைதராபாத்துக்கு விமானம் மூலம் வந்த ஹிதார், அங்கிருந்து பேருந்து மூலம் செகந்திராபாத்துக்குச் சென்றார்.அங்கு மாதாந்தம் 100 ரூபாவை வாடகையாகக் கொடுத்து, அறை ஒன்றில் தங்கிய அவர் காலணிக் கடைகளில் பணியாற்றினார்.அதன் பின்னர், காகிதத் தயாரிப்பு நிறுவனத்தில் பணியாற்றிய ஹிதார் சில நாட்கள் ரிக் ஷாத் தொழிலாளிகள் மற்றும் சாமியார்களுடன் ஒன்றாகத் தங்கினார்.ஏழையாக வாழ்ந்து ஒரு மாதம் முடிந்துள்ள நிலையில், ஏழை மக்களின் கஷ்டத்தை புரிந்து கொண்டதோடு ஏராளமான அனுபவங்களை பெற்ற ஹிதாரை, அவரது பெற்றோர் வந்து அழைத்துச் சென்றனர். (இ)

# தென்னாசியாவின் மிகப்பெரிய கொடி



பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை யொட்டி இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியான வாகா எல்லையில் 120 அடி நீளமும் 180 அடி அகலமும் கொண்ட பாகிஸ்தானின் தேசியக் கொடி, 400 அடி உயரம் கொண்ட கம்பத்தில் இன்று பறக்கவிடப்பட்டது.
இதன் மூலம் தெற்காசியாவின் மிகப் பெரிய தேசியக் கொடியை ஏற்றிய பெருமை பாகிஸ்தானுக்குக் கிடைத்துள்ளது.
இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவத் தரப்பில், "உலகளவில் இது எட்டாவது மிகப்பெரிய கொடி"என்று கூறப்பட்டுள்ளது. (இ)

# எடப்பாடி முதல்வரானது தற்செயல் விபத்தே!




எடப்பாடி பழனிச்சாமி தமிழகத்தின் முதலமைச்சரானது ஒரு விபத்து என அதிமுக அம்மா அணியின் துணைப் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கருத்து தெரிவித்துள்ளார்.
மதுரை மேலூரில் டிடிவி தினகரன் பங்கேற்கும் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போது தினகரன் செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளித்தார். அப்போது அவர், "எடப்பாடி கே.பழனிச்சாமி தமிழக முதல்வரானது ஒரு விபத்து. எடப்பாடி அணியினர் அதிமுக தொண்டர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.ஜெயலலிதா வழியில் தமிழகத்தில் ஆட்சி நடைபெறும் வரை அரசுக்கு எவ்வித சிக்கலும் இருக்காது.
துணைப் பொதுச் செயலாளராக நான் நியமனம் செய்யப்பட்டது செல்லாது என்ற தீர்மானத்தில் முதல்வரும் எம். எல்.ஏ.,க்களும் கையெழுத்திட்டது '420' ( ஏமாற்றுப்பேர்வழி)செயல் என்றுதான் கூறினேன். இருப்பினும், முதல்வரை '420' என்று கூறுவதில் எனக்கு எந்தப் பயமும் இல்லை. எனக்கு யார் மீதும் எந்தப் பயமும் இல்லை. எனக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. சிற்சில இடர்ப்பாடுகளை எப்படிக் கையாள்வது என்று எனக்குத் தெரியும். அதிமுக அணிகள் இணைவது உறுதி. அதேபோல் இரட்டை இலைச் சின்னத்தையும் நிச்சயம் மீட்டெடுப்போம். இப்போது கட்சியில் சிலர் கையில் பதவி இருப்பதால் ஆட்டம் போடுகிறார்கள். தேவைப்படும்போது தகுந்த அறுவைச் சிகிச்சை செய்யப்படும். தவறு செய்பவர்கள் அனைவரும் திருத்தப்படுவார்கள்" என்று தெரிவித்தார். (இ)



## பேய் மயம்

'பிக் பாஸ்' வீட்டில் பேய் இருக்கிறது எனக் கூறி கவிஞர் சினேகன் நேற்று இரவு அனைவரும் தூங்கிக்கொண்டிருக்கும் போது அலறினார்.

ஆனால், உண்மையில் அங்கு பேய் இல்லை. அது 'பிக்பாஸ்', சினேகனுக்குக் கொடுத்த 'டாஸ்க்'.

அதன்படி ஏனையவர்களுடன் இணைந்து பிந்து மாதவி மற்றும் கணேஷ் ஆகியோரை வீட்டில் பேய் இருக்கிறது என நம்பவைத்துவிட வேண்டும் என்பதே அந்த விளையாட்டு.

இதையடுத்து நேற்று முழுவதும் வீடு ஒரே பேய் மயம். (ஒ)



## மோசமான தருணம்

இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கைக் கிரிக்கெட் அணி முழுமையாகப் பறிகொடுத்தது. அதிலும் மூன்றாவது டெஸ்ட் போட்டி மிகவும் மோசமாக இரண்டரை நாட்களுள் முடிவடைந்தது.

இந்தத் தோல்விக்குப் பின்னர் கருத்துக் கூறிய இலங்கை அணியின் தலைவர் சண்டிமால்,

"இது எனது வாழ்க்கையில் மிகவும் கடினமான தொடர் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் தொடரில் எங்களால் எந்தவொரு ஆட்டத்திலும் முழுமையாக 5 நாட்களும் ஆட முடியாமல் போனது. எனது வாழ்க்கையில் மோசமான தொடர் இதுவாகும். இது அணிக்கும், எனக்கும் கடினமான தருணமாகும். எல்லாப் புகழும் இந்திய அணியையே சாரும். இந்தத் தொடரில் இந்திய அணி அருமையாகச் செயற்பட்டது.

ஆட்டத்தை 5 நாட்களுக்கு இழுத்துச் செல்ல முடியாமல் போனது ஏமாற்றமளிக்கிறது. 3 நாட்களுக்குள் தோல்வியைச் சந்தித்ததை நியாயப்படுத்த முடியாது. நாங்கள் தோல்வியைச் சந்தித்தாலும் ரசிகர்கள் ஆதரவு அளித்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. அதுதான் அணிக்கு தேவையானதாகும். விரைவில் நாங்கள் வெற்றிப் பாதைக்குத் திரும்புவோம்.

கடுமையாகப் பயிற்சி மேற்கொண்டோம். நல்ல திட்டத்துடன் களம் கண்டோம். ஆனால் அதனைக் களத்தில் செயற்படுத்த முடியாமல் போய்விட்டது." என்றார். (ஐ)




## உலக தடகளம்: அமெரிக்கா முதலிடம்

16ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் அமெரிக்கா 10 தங்கங்கள், 11 வெள்ளிகள், 9 வெண்கலங்கள் என்று மொத்தம் 30 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.

16ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்தது.

கடந்த 4ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டி இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவில் நிறைவுபெற்றது.

இதில் அமெரிக்கா 10 தங்கங்கள், 11 வெள்ளிகள், 9 வெண்கலங்கள் என்று மொத்தம் 30 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.

கடந்த முறை முதலிடம் பெற்ற கென்யா 5 தங்கங்கள், 2 வெள்ளிகள், 6 வெண்கலப் பதக்கங்களுடன் 2ஆவது இடத்தைப் பெற்றது. மொத்தம் 38 நாடுகள் பதக்கப் பட்டியலில் இடம்பிடித்துள்ளன.

பெண்களுக்கான 4X400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் (ரிலே) அமெரிக்க அணி தங்கப் பதக்கம் வென்றது. தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்ற அமெரிக்க அணியில் இடம் பெற்றிருந்த அலிசன் பெலிக்ஸ் உலக தடகளப் போட்டிகளில் அதிக பதக்கங்களை (11 தங்கங்கள், 3 வெள்ளிகள், 2 வெண்கலங்கள்) வென்ற வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.

அவர் ஒலிம்பிக் போட்டிகளில் 6 தங்கங்கள், 3 வெள்ளிகளை வென்றுள்ளார். (ஐ)

## தள்ளியதால் தடை

பார்சிலோனா அணியுடனான ஆட்டத்தின்போது நடுவரைப் பிடித்து தள்ளியதால் ரியல் மாட்ரிட் அணி வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு ஐந்து போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் 'ஸ்பானீஸ் சூப்பர் லீக்' தொடரில் பார்சிலோனா மற்றும் ரியல் மாட்ரிட் அணிகள் மோதிய முக்கியமான போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில், 3-1 என்ற கணக்கில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது. போட்டியின் போது ரியல் மாட்ரிட் அணியின் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டினோ களநடுவரிடம் மஞ்சள் அட்டை பெற்றார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரொனால்டினோ கோல் அடித்ததும் தனது ஜெர்சியைக் கழற்றி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார். விதிமுறைகளின் படி இது தவறு என்பதால் கள நடுவரிடம் இரண்டாவது மஞ்சள் அட்டையை அவர் பெற்றார். இரண்டு மஞ்சள் அட்டைகள் என்பது சிவப்பு அட்டைக்குச் சமம் என்பதால் அவரை களத்திலிருந்து வெளியேறுமாறு நடுவர் கூறினார்.



இதனால், நடுவருக்கும் ரொனால்டோவுக்கும் இடையே வாக்குவாதம் வெடித்தது. அப்போது, நடுவரை ரொனால்டோ பிடித்துத் தள்ளினார் எனக் கூறப்படுகிறது. சிவப்பு அட்டை பெற்றதால் ஏற்கனவே அவரால் ஒரு போட்டியில் விளையாட முடியாத நிலையில், நடுவரைத் தள்ளிய விவகாரத்தில் மேலும், நான்கு போட்டிகளில் அவருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அடுத்த ஐந்து போட்டிகளில் அவரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், தனக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக அவரால் மேல் முறையீடு செய்ய இயலும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குரல் கொடுத்த மோகன்லால்




மலையாளத்தில் 'ஆகாசமிட்டாய்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்படும் சமுத்திரக்கனியின் 'அப்பா' படத்துக்காக மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லால் குரல் கொடுத்திருக்கிறார்.

சமுத்திரக்கனியின் 'நாடோடிகள்' படத்தைத் தொடர்ந்து அவர் இயக்கி நடித்த 'அப்பா' படம் மலையாளத்தில் 'ஆகாசமிட்டாய்' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டு வருகிறது.

ஜெயராம் நடிக்கும் இந்த மலையாளப் படத்தை சமுத்திரக்கனியே இயக்கி வருகிறார்.

சமீபத்தில் இந்தப் படத்தின் வீடியோ வடிவில் 'போஸ்டர்' வெளியிடப்பட்டது. அதில் மோகன்லாலின் குரல் ஒலித்தது. இதற்கு நன்றி தெரிவித்து ஜெயராம் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்பு சமுத்திரக்கனியின் 'அப்பா' படம் தமிழில் வெளியாவதற்கு முன்பு அந்தப் படத்தின் விளம்பர வீடியோவிலும் மோகன்லால் அவரது அப்பாவைப் பற்றி பேசி அந்தப் படத்தை பிரபலப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## iOS ஜிமெயிலில் பாதுகாப்பு வசதி

அண்ட்ரொய்ட் இயங்குதளத்தைத் தொடர்ந்து ஐ.ஓ.எஸ். இயங்குதளத்திலும் Anti-Phishing Security Checks வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஜிமெயில் செயலியூடாக, வாடிக்கையாளர்கள் பாதுகாப்பற்ற தளங்களில் நுழைவதைத் தவிர்க்க முடியும்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அண்ட்ரொய்ட் இயங்குதளத்தில் மாத்திரமே அறிமுகமான இந்த வசதி தற்போது ஐ.ஓ.எஸ். தளத்திலும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஐபோன் மற்றும் ஐபாட் மூலம் ஜிமெயில் செயலியை வாடிக்கையாளர்கள் பயன்படுத்தும்போது 'மால்வேர்' அடங்கியுள்ள தளங்களில் நுழைய முற்பட்டால் எச்சரிக்கை செய்யும். இதேபோன்று கணனியில் குரோம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட Safe Browsing அம்சம் இம்முறை ஐ.ஓ.எஸ். தளத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## மகளைக் கடத்த முயற்சி கமல் அதிர்ச்சித் தகவல்



'மகாநதி' படத்தில் வரும் சம்பவம் போல் என் மகளைக் கடத்தத் திட்டமிட்டனர் என கமல்ஹாசன் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

தனக்குப் பிடித்த 70 இந்தியப் படங்களின் பட்டியலை ஆங்கில நாளிதழ் ஒன்றில் வெளியிட்டுள்ளார் கமல். அதில் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை வாசகர்களிடம் பகிர்ந்துள்ளார்.

கமலுக்குப் பிடித்த 70 படங்களின் பட்டியலில் அவர் நடித்த மகாநதியும் இடம்பெற்றுள்ளது. அதைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"எது என்னை 'மகாநதி' கதையை எழுத வைத்தது என்று இதுவரை சொன்னதில்லை. இப்போது என் மகள்கள் வளர்ந்துள்ளார். எனவே இப்போது சொல்கிறேன்.

"என் வீட்டில் வேலை செய்தவர்கள், என் மகளைக் கடத்தி அதன் மூலம் என்னிடம் பணம் பறிக்கத் திட்டமிட்டார்கள். இதற்கான ஒத்திகையும் நடந்துள்ளது. ஆனால் எதேச்சையாக அவர்களுடைய திட்டத்தை நான் அறிந்துவிட்டேன். எனக்குக் கோபம் வந்தது. பதற்றமானேன். என் குழந்தையின் பாதுகாப்புக்காக நான் கொலை செய்யவும் தயாராக இருந்தேன். பிறகு எனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டேன்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நான் எழுத உட்கார்ந்தபோது இந்தக் கதையைத் தானாக எழுதினேன் என்று கூறியுள்ளார். (ஒ)

# பொலனறுவையில் 600 மில்லியனில் தொல்பொருள் நிலையம்



பொலனறுவை புதிய நகரத்தில் மிகப் பெரிய அளவில் தொல்பொருள் நிலையம் நிர்மாணிக் கப்பட்டு வருகிறது. தொல்பொருள் நிலையம் மற்றும் தகவல் நிலையத்தின் நிர்மாணப்பணி கள் குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. 'எழுச்சிபெறும் பொலனறுவை' மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 600 மில்லியன் ரூபா செலவில் இந்த நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொலனறுவை நகரத்தின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து அடுத்த தலைமுறைக்கு தெளிவை வழங்குவதற்கும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தமது அறிவை வளர்த்துக்

## மைத்திரி தலைமையில் நேற்றுக் கூட்டம்

கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இந்தத் தொல்பொருள் நிலையமும் தகவல் மத்திய நிலையமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிர்மாணப்பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, இப்பணி களை துரிதப்படுத்துமாறு உரிய தரப்பின ருக்கு பணிப்புரை வழங்கினார். (உ)

## குளங்கள் புனரமைப்பு 57 மில்லியன் ஒதுக்கீடு

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து மிக மோசமாகப் பாதிக்கப் பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. அந்த வகையில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக இவ்வாண்டு 39 வேலைத் திட்டங்கள் 57.08 மில்லியன் ரூபாசெலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
மீள்குடியேற்ற அமைச் சினுடைய நிதியொதுக் கீட்டின் கீழ் ஐந்து சிறு குளங்களைப் புனரமைப் பற்கும் நான்கு உவர் நீர்த்தடுப்பணைகளைப் புனரமைப்பதற்குமாக ஒன்பது வேலைத்திட்டங் களுக்கு 23 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இதேபோன்று விவசாய அமைச்சினூடாக ஆறு சிறிய குளங்களை புனர மைப்பதற்கும் 13 சிறிய குளங்களை ஆழப்படுத்து வதற்கும் 31 மில்லியன் ரூபாவும், கமநல அபி விருத்தித் திணைக்களத்தி னுடைய நிதியொதுக்கீட் டின் கீழ் உள்ளூரில் காணப்படும் 10 குளங் களை புனரமைப்பதற்கும் கைவிடப்பட்ட ஒரு குளத் தினை துப்புரவு செய்வ தற்கும் 3.8 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.
மேற்படி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கமநல அபி விருத்தித்திணைக்களத் தினூடாக 39 வேலைத் திட்டங்களுக்கு 57.08 மில் லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது. (உ-100)

## டெங்கு ஒழிப்பு முல்லையில் முன்னெடுப்பு

முல்லைத்தீவு மாவட டத்தின் பல்வேறு பகுதி களிலும் டெங்கு நோய் ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.
டெங்கு நோயைக்கட்டுப் படுத்தும் வேலைத்திட் டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் பட்டு வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்டத் திலும் பல்வேறு பகுதி களிலும் டெங்கு நோய் விழிப்புணர்வுச்செயற் பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.
பொதுச் சுகாதாரப் பரி சோதகர்கள், பிரதேச வைத் தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள், பொலிஸார், படையினர் இணைந்து இச்செயற்பாடுகளை முன் னெடுத்து வருகின்றனர்.
இதேவேளை கடந்த வாரம் முதல் மல்லாவி, துணுக்காய், ஒட்டு சுட்டான், கரைதுரைப் பற்று ஆகிய பகுதிகளில் விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.
நெடுங்கேணி பொலிஸா ரின் ஏற்பாட்டில் டெங்குநோய்விழிப் புணர்வுச்செயற்பாடும் சிரமதானப்பணியும் ஒலு மடு சிறுவர் பாடசாலை யில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-100)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அததெரண

# தனித்து ஆட்சியமைக்க தயாராகிறது ஐ.தே.க.?

அடுத்த ஆண்டில், கூட்டு அரசாங் கத்தில் இருந்து வெளியேறி தனித்து ஆட்சி அமைப்பது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசித்து வருவ தாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அண் மைய சில செயற்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கூட்டு எதிரணி யின் தூண்டுதலின் பேரில், அவ்வாறு நடந்து கொள்வதாக ஐ.தே.க. சந்தே கிக்கிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவும் நாட்டின் அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக, கலந்து ரையாடியுள்ளனர். ஒரே கூட்டு அரசாங்கத்தில் இருந்தாலும், சிறி லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலரும், ஐ.தே.கவை தாக்கி வருகின் றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியு டன் ஐ.தே.க. தொடர்ந்து கூட்டணி வைத்துக் கொண்டால், தாம் பதவி விலகுவோம் என்று ஐ.தே.க. அமைச் சர்கள், பிரதி அமைச்சர்கள் சிலர், எச்சரித்துள்ளனர் என்றும் அறியப்ப டுகிறது. இந்த நிலையிலேயே, டிசெம் பர் 31ஆம் திகதியுடன் கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகி, தனித்து ஆட்சியமைப்பது குறித்து ஐ.தே.க. ஆலோசித்து வருகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (உ)

## கௌரவிப்பு நிகழ்வு

கிளிநொச்சியில் அமைந் துள்ள மகாதேவா சுவாமி கள் சைவச்சிறுவர் இல்லத் தின் தலைவரும் முன்னாள் அரச அதிபருமான தி.இராச நாயகம் 'யாழ்விருது' பெற் றமைக்கான கௌரவிப்பு நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.
எதிர்வரும்19ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு மகாதேவா சுவாமிகள் சைவச்சிறுவர் இல்ல வளா கத்தில் முன்னாள் உதவி அரசாங்க அதிபர் பொன் நித்தியானந்தன் தலைமை யில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.
இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பி னர்களான மாவை சேனாதிராஜா , சிவஞா னம் சிறிதரன் ஆகியோரும் மாவட்ட அரசாங்க அதி பர் சுந்தரம் அருமைநாய கம் மற்றும் பிரதேச செய லாளர்கள் மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர் கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-100)

## "20"க்கு எதிராக 10 முறைப்பாடுகள்

அரசாங்கத்தினால் நாடாளு மன்றத்தில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைவுக்கு எதிராக, உச்சநீதிமன்றத்தில் 10 மனுக் களைத் தாக்கல் செய்ய அர சியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் திட்டமிட் டுள்ளன. அனைத்து மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் அரசமைப் பில் திருத்தம் செய்வதற் கான 20ஆவது திருத்தச் சட்ட வரைவு முன்வைக்கப் பட்டுள்ளது. இதற்கு எதி ராக உச்ச நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய் வதற்கு, பவ்ரல் மற்றும் கபே அமைப்புகள் தயா ராகி வருகின்றன. 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான வர்த் தமானி வெளியிடப்பட்டு, இரண்டு வாரங்களாகி யுள்ள நிலையில், எந்த நேரத் திலும் இதனை நாடாளு மன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும். அனைத்து மாகாணசபைத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தும் வகையிலான இந்த திருத்தச்சட்ட வரைவு அரச மைப்புக்கு முரணானது என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரி யவும் சுட்டிக்காட்டியி ருந்தார். (உ)

## "ஆவாக்களுக்கு" தனிச்சிறை

யாழ்ப்பாணம், சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட் டுள்ள, ஆவா குழு உறுப் பினர்கள் என்று சந்தேகிக் கப்படுவோரை, ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற் றுவதற்கு, பொலிஸார் நீதி மன்ற அனுமதியைக் கோரி யுள்ளனர். யாழ். குடா நாட்டில் பல்வேறு குற்றச் சம்பவங்களிலும் ஈடுபட் டார்கள் என்றும், ஆவா குழு உறுப்பினர்கள் என் றும் கைது செய்யப்பட்ட பலர், யாழ். சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர். இவர்களை ஒரே சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதால், சூழ்ச்சி நடவடிக்கைகளை மேற் கொள்ளும் ஆபத்து இருப் பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால் யாழ்ப்பாண சிறைச்சாலையில் பாது காப்பு பலப்படுத்தப்பட் டுள்ளதாகவும் அவர் கூறி னார். (உ)

## நாளை நாளும் கோளும்

16.08.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள்
நவமி பி.ப. 01.50 வரை | ரோகினி பி.இ. 12.13 வரை | சித்தயோகம் | நல்லூர் கைலாசவாகனம் | தொல்புரம் மடத்துப்பிள்ளையார் கொடியேற்றம்
இராகுகாலம் 12.05-01.35 | சுபநேரம் 04.35-06.05 | எமகண்டம் 07.35-09.05

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | வீண்செலவு | ஆர்வம் | பயம் | விருத்தி | செலவு | பாராட்டு | வெற்றி | சலனம் | சாதனை | அமைதி | அலைச்சல் |

எதிரொலி
Ethiroli






# நல்லைக்குமரன் மலர் வெளியீடு

நல்லைக்குமரன் 'வெள்ளி விழா' மலர் வெளியீடு இன்று முற்பகல் 9.30 மணியளவில் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டார்.

நல்லைக்குமரன் நூலினை நூலாசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக் கொண்டனர். (உ–16)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1977.08.15**

இலங்கையில் தமிழருக்கெதிரான இனப்படுகொலை ஆரம்பிக்கப்பட்டது. இதில் 400 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். 10,000 பேர் வரை காயமடைந்தனர்.

# இனங்காண உதவவும்



கடந்த 07 ஆம் திகதி ஏ-9 வீதியில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் சிறு விபத்துக்குள்ளான நிலையில் முதியவர் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை அவரை உறவினர்கள் எவரும் தொடர்பு கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரை தெரிந்தவர்கள் 0779396044 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அடையாளம் காண உதவுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-11)

# வினாத்தாள்களுடன் வாகனம் விபத்து

உயர்கல்வி அமைச்சிலிருந்து பதுளைக்கு உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை ஏற்றிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை பதுளை பண்டாரவளை வீதியின் உடுவர பகுதியில் இந்த வாகனம் வீதியை விட்டு விலகி மதிலொன்றில் மோதியுள்ளது. விபத்தில் காயமடைந்த சாரதி பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும், வினாத்தாள்கள் பாதுகாப்பாக பதுளை உயர் தொழிநுட்ப நிறுவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே இந்த விபத்துக்குக் காரணம் என ஹாலி-எல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

**சர்வதேசத்திடம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் ஐ.நா. செயலாளர் நாயகம், மனித உரிமை பேரவை உட்பட சர்தேச தரப்புக்களின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

மேற்குறித்த விடயங்களை இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம், ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம், அமெரிக்க, இந்தியா, பிரித்தானியா, ஜேர்மன், சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், உள்ளிட்ட நாடுகளின் தூதரகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-09)

**புலிகளின்...**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் குறித்த கைத்துப்பாக்கியையும், தோட்டாக்களையும் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்க அவர் முயன்றுள்ளார். இது குறித்த தகவல் பொலிஸ் விசேட பிரிவுக்கு கிடைத்தது.

உடனடியாக குறித்த சார்ஜண்டின் வீட்டைச் சுற்றி வளைத்த பொலிஸார், அவரைக் கைது செய்ததுடன், அவர் வசமிருந்த கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் என்பவற்றையும் மீட்டனர். கைது செய்யப்பட்ட சார்ஜண்ட் வவுனியாப் படைத்தளத்தில் பணிபுரிபவர் எனவும், அவர் வசமிருந்த கைத்துப்பாக்கி புலிகளின் எந்தத் தளபதிக்குச் சொந்தமானது என்பது குறித்தும் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.(அ)

**வெளிவிவகார...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்தே, அந்த வெற்றிடத்துக்கு அமைச்சர் மாரப்பன நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில், கடந்த புதன்கிழமையன்று இடம்பெற்ற சந்திப்பொன்றின்போது, அமைச்சர் திலக் மாரப்பனவை வெளிவிவகார அமைச்சுப் பதவியை ஏற்கத் தயாராக இருக்குமாறு, ஜனாதிபதியும் பிரதமரும் கேட்டிருந்தனர். இந்த நிலையிலேயே திலக் மாரப்பன இன்று பதவியேற்றுள்ளார். (அ)

**உயிர்பறித்த...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டோர் கோஷங்களை எழுப்பினர். பின்னர் பொலிஸாரின் தலையீட்டை அடுத்து 10 நிமிடங்களின் மறியல் போரைக் கைவிட்ட மக்கள், கடுகதி ரயிலைத் தொடர்ந்து பயணிக்க அனுமதித்தனர். (அ)

# நியமனக் கடிதம்



வடமாகாண உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கான நியமனங்களை வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே வழங்கி வைத்துள்ளார்.

வடமாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவாகிய 13 பேருக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர், செயலகத்தில் வைத்து கையளித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுநர், "நேர்மையாக அனைவரும் நாட்டின் முன்னேற்றத்துக்காக செயலாற்ற நிர்ப்பந்திக்கும் அதேவேளை, குறிப்பாக வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக உங்களை அர்ப்பணிக்க வேண்டும்" எனவும் கோரிக்கை விடுத்தார். வட மாகாணத்தில் படித்த இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்புத் தொடர்பில் கூடிய கவனத்தை நான் செலுத்தி வருகின்றேன். எதிர்காலத்தில் வடமாகாண அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புதவற்கான செயற்திட்டங்களை முன்னெடுப்பேன் எனவும் தெரிவித்தார். (உ-11)

**வெள்ளத்தின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆறாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மடுமாதா ஆவணித் திருவிழா, சீரற்ற காலநிலை காரணமாக நிறைவுபெற முடியாத சூழல் ஏற்பட்டிருந்தது.

வரலாறு காணாத மழை வீழ்ச்சியினால் மடுத்திருத்தலச் சூழல் எங்கும் வெள்ளக் காடாக மாறியது. இதனால் அன்னையின் திருவிழாவுக்காக நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து முகாமிட்டிருந்த பக்தர்கள் பெரும் நெருக்கடிக்குள் சிக்கினர்.

பக்தர்களின் சிரமங்களை கருத்தில் கொண்டு வழமையான வழிபாட்டு நேர அளவுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டதாக திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை அறிவித்திருந்தார்.

நேற்றைய தினம் மாலை பெய்த கடும் மழையின் காரணமாக விசேட நற்கருணை ஆராதனையில் நேரமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் இன்று காலை காலநிலை ஏதுவாக இருந்தமையினால் திருவிழாத் திருப்பலி காலை 6.15 மணிக்கு ஆரம்பமானது.

தமிழ், சிங்களம் மற்றும் இலத்தீன் மொழிகளில் திருவிழாத் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதில் அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அந்திராடி, யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், கொழும்பு துணை ஆயர் இம்மானுவேல் மற்றும் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸிலி சுவாமிப்பிள்ளை ஆகியோர் இதில் இணைந்து கொண்டனர்.

வருடத்தில் இருமுறை மட்டும் வழங்கப்படும் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் மற்றும் அன்னையின் திருச்சொரூப பவனியுடன் மடு அன்னையின் வருடாந்த ஆவணித் திருவிழா இன்று இனிதாக நிறைவடைந்துள்ளது. (அ)



தேவி ஜோதிட நிலையம்
உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
பண்டித் அசோக்
துல்லியமாகக் கணித்து
பார்க்கப்படும் விடயங்கள்



கைரேகை, நாம நட்சத்திரம், கல்வி, தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லக்ஷ்மி வசீகரம், திருமண யோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வீட்டில் வதிவிட பிரச்சினை, பயண எதிரிகள், கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனம் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்றுகூடுதல், பில்லி சூனியம் வெட்டப்படும், பாலியல் பிரச்சினை, அதிர்ஷ்ட இலாபம் கிடைத்தல், ஆயுள்வேத மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.

ஒருமுறை எங்களிடம் வாருங்கள்
100%
நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளலாம்.
எல்லா மதத்தவர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

Time: 7.00 a.m. to 7.00 p.m.
Tel.: 077 4160789

கே.கே.எஸ். றோட்,
சந்தை வீதி தெற்கு,
சுன்னாகம்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 15.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.